முதலைகளையெல்லாம் பிடித்து சாத்தனூர் அருகில் இருக்கின்ற முதலைப் பண்ணையிலே விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

198—

சாலை அரிப்பு

***10134—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினை நிரந்தரமாகச் சரி செய்ய சாலையின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். இதற்காக தனியார் நிலம் தேவைப்படுவதால் இச்சாலையை முழுமையாகச் சரி செய்ய தற்சமயம் இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டணங்கால் சாலை என்பது கனரக வாகனங்கள் செல்லும் முக்கியமான குலசேகரம்–சுருளோடு சாலையாகும். மலைப் பகுதிச் சாலையுமாகும். குலசேகரம்–அரசுமூடு முதல் மங்கலம், இடைக்கட்டான், பொன்மனை பகுதி என்பது பட்டணங்கால் சாலையின் பகுதியாகும். பல இடங்களில் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுவதோடு, விபத்துகளை ஏற்படுத்தும்

சாலையாகவும் உள்ளது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் புத்தன் டேம் பார்க்க வந்தபோது இதே சாலையில் நின்று அபாயகரமான சூழலைப் பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, இந்தச் சாலை இருக்கக்கூடிய நிலையிலேயே சேனலின் பக்கத்தில் பக்கச் சுவர் கட்டி இருவழிச் சாலையாக ஆக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை தமிழக அரசின் வகைப்பாட்டில் மாநில நெடுஞ்சாலையாக உள்ளது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆரல்வாய்மொழி முதல் நெடுமங்காடு வரை செல்லக்கூடிய அந்த மாநில நெடுஞ்சாலையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி ஏற்கெனவே ஒரு வழிச் சாலையாக இருந்தது. அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, ஒரு அபாயகரமான பகுதியாக உள்ளதையும் நன்கு அறிவோம். ஒரு புறம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வாய்க்கால் செல்லக்கூடிய பகுதி, அது ஏறத்தாழ 10 மீட்டர் அளவுக்கு ஆழங்கொண்டதாகும். இன்னொரு புறம் தனியாருக்குச் சொந்தமான நிலம் ஏறத்தாழ சுமார் 5 மீட்டர் அளவுக்கு ஆழம் கொண்ட பகுதியாகவும் உள்ளது. எனவே, இந்தப் பகுதியைப் பொறுத்தளவில், குறிப்பாக கிலோ மீட்டர் 30/0–லிருந்து 32/0 வரை சுமார் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அதேபோல, 32/0 முதல் 33/4 வரை சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவிலும், மொத்தமாக ஏறத்தாழ ஒரு கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் இருவழிச் சாலையாக மாற்றுகின்ற பணியும், அதேபோல, அபாயகரமான பகுதியிலே சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு, மண்ணரிப்பைத் தடுக்கின்ற வகையிலே, பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே பக்கச் சுவரும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நிலைமையும் உண்மையானதுதான். எனவே, எதிர்காலத்திலே படிப்படியாக அந்தச் சூழ்நிலையை மாற்ற அந்த அபாயகரமான பகுதிகளில் பக்கச் சுவர் அமைப்பதற்கும், சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்றுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

[2008 மே 5

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலையினுடைய தன்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கின்றார்கள். இவ்வாண்டு அந்தச் சாலை சீர் செய்யப்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அண்மையில் ஏற்பட்ட பெருமழையால் பல சாலைகளில் இதுபோன்ற அரிப்பு ஏற்பட்டு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. பொன்மனை–ஈஞ்சக்கோடு, அழகியமண்டபம்–திருவட்டாறு சாலையில் பூவன்கோடு சந்திப்பு, குழித்துறை–ஆலஞ்சோலை சாலையில் அண்டுகோடு—உத்தரங்கோடு முதல் முழுக்கோடு வரையுள்ள சாலையும், கழுவந்திட்டை–மருதங்கோடு சாலையும், போக்குவரத்து நின்றுபோன அணைமுகம் சாலையும் சீரமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முக்கிய சாலைகளை, குறிப்பாக மாநில நெடுஞ்சாலைகளின் அனைத்துப் பகுதிகளையும் நான் ஒரு நாள் முழுமையாகத் தங்கி பார்வையிட்டேன். அப்போதெல்லாம் சாலைகள் நல்ல நிலைமையிலே, போக்குவரத்துக்கு ஏற்ற நிலைமையிலே இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். நிகழ்ச்சியிலே சந்திக்கின்றபோது அதைக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு கடந்த மாதம் எதிர்பாராமல் பெய்த மழையின் காரணமாக–குறிப்பாக தமிழகத்திலே மழையால் அதிகம் பாதிக்கக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்–அந்த அடிப்படையிலே அந்தச் சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். மொத்தமாக, கடந்த மழைக்கு மட்டும் சுமார் 7 ஆயிரம் கிலோ மீட்டர் நீள சாலைகள், அரசின் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் பாதிக்கப்பட்டன. அவை எல்லாம் ஓரளவுக்குச் செப்பனிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலைகள் எல்லாம் நிச்சயமாக, படிப்படியாக எதிர்காலத்திலே நல்ல முறையிலே போக்குவரத்துக்கு ஏற்ற வகையிலே சீரமைக்கப்படும். ஏற்கெனவே மூலக் கேள்வியில் உள்ள சாலையைப் பொறுத்தளவில் இந்த ஆண்டே சீர் செய்யவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழுத்தமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

2008 மே 5]

படிப்படியாகச் சீரமைக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னால், பக்க சுவர் கட்டித் தரவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் தேவைப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: சாலையைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னால், மேம்படுத்தவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. எனவே, படிப்படியாக அதை எதிர்காலத்திலே இந்த அரசு சீரமைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

199—

தொழிற்பயிற்சிப் பள்ளி

***16445—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்தும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.